# குடியரசு

## குடியரசு நாள் (26-01-2019)

மக்களால், மக்களுக்காக;
மாட்சிமை பொருந்திய,
மக்களின் அரசு **"மக்களாட்சி"** யாய்,
மலர்ந்த நந்நாள்!

வேற்றுமையில் ஒற்றுமையை,
வியனுலகம் காணவைத்த;
நந்நாடு!

மதம், மொழி, இனம் என
எத்துனைக் கூறுகள்!
ஒற்றைக் குடையின் கீழ்,
ஒரு துணைக்கண்டம்!
ஐரோப்பாவை மிஞ்சும்,
ஆயிரம் கூறுகள்!

இயற்கைக் கூட்டும் தட்ப வெப்பம்;
இந்து மாக்கடல் முதல்,
இமயம் வரை வெவ்வேறானவை!

முன்னூறு ஆண்டுகள்,
நம்மைக் கோலோச்சி,
முகவரி திருத்திய,
ஆங்கிலேயரால்,
ஆங்கிலத்தால் ஒன்றானோம்!
அனைவருக்கும்,
இனிய
**குடியரசு நாள் வாழ்த்துக்கள்**
அன்புடன்,
**கவிவளவன் (26-01-2019)**

## குடியரசு நாள் வாழ்த்து!

எழுபது ஆண்டு தன்னை
இனியதாய் முடித்து விட்டோம்!

பழுதில்லா பயணம் என்றோ;
பார்புகழ் கேண்மை என்றோ,
எழுந்து நாம்சொல் வதற்கு;
இன்னிய நிலைதான் உண்டோ?

விழுமிய கலங்கள் கூட்டும்
வேதனைப் பரல்க ளுண்டு!
தழுவிடும் அரசிய லார்கள்;
தரமற்றுப் பலவும் செய்வர்!

உழுதிடும் நிலமும் ஓர்நாள்,
உயர்வினைத் தருமே எனவாய்,
உழன்றிடும் உழவன் போலே,
ஓய்வின்றி நிறையும் மக்கள்!

பழுதெலாம் களைந்துப் போட்டு,
பாங்குடன் வாழ்வைத் தேட,
அழகிய நாளாம் இதனில்;
அனைவரும் மனதி லேற்றி,
விழியென வாழ்வை எண்ணி;
விருப்புடன் நலங்கள் செய்து,
அழியாப் புகழின் தளமாய்,
அனைத்தே வாழ்ந்திருப்போம்!

மழையென இன்பம் சேர
மன்னிய புகழைக் காப்போம்!
-- *கவிவளவன்* 26-01-2020

## குடியரசு நாள்! - 26-01-2022

# மக்களால், மக்களுக்காக,

ஒருங்கிணைந்த,

ஒற்றைக் குடையான முடியின் கீழ்

நாம் எழுந்த ஓர்

உன்னத நாள்!

# பயின்ற வாழ்வும், பேசும் மொழியும்,

வெவ்வேறாயினும்,

வேற்றுமையில் ஒற்றுமையை,

உலகுக்கு உணர்த்திய தேசம்!

# எழுபத்தி மூன்று ஆண்டுகளை,

இனிதே கடந்தோம்!

சிறந்த அறிவு, கல்வியில் மிளிர,

இந்தியா என்றோர் எழுநிலை
கொண்டோம்!

# ஒருவருக்கொருவர் ஒப்பிட வேண்டோம்!
!ஆளுமை செய்யும் அவலமும் வேண்டோம்

# யாவரும் நிறையே!

யாவரும் இணையே!

# அவரவர் கலன்களாய்,

அவரவர் மொழியில் பயணம் செய்வோம்!

அவரவர் வழியில் இறையைக் காண்போம்!

# ஒற்றுமை என்னும், ஒப்பிலா வழிநிலை;

வேற்றுமை நீக்கி, வேர்விட்டு வளரும்!

இந்தியச் சிந்தனை உலகை வெல்லும்!

- **கவிவளவன்**

25-01-2022 (9.30 PM)

## குடியரசு நாள் வாழ்த்து!

திக்கெட்டும் இசை முழங்க,
மக்களாட்சி மாண்புகளை;
தக்கவைத்த சீர் தேசமிது!
மக்களால் மக்களுக்காக,
சிக்கெடுத்தச் சீர்மையுண்டு!
தக்க வைத்துத் தகைவுடனே,
வேற்றுமையில் ஒற்றுமையை;
எந்நாளும் காப்போம்!
தீண்டாமை; அறியாமை,
துரத்தி முறை செய்வோம்!
இனிய **குடியரசுநாள் வாழ்த்துக்கள்!**
**- கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்.**
26-01-2021

## குடியரசு நாள் வாழ்த்து!

உரிமையோடும்,
உணர்வுகளைத் தாங்கும்
கலனாகவும்,
மனித வாழ்வின் மாட்சிமைக்கு
உரமாகவும் நிறைந்து,
உறுதுணை செய்யும்,
மக்களாட்சியின், அடையாளமாகவும்,
ஆளுமையின் நினைவாகவும், நிற்கும்
இக் குடியரசு நாளில், மனமுவந்து,
ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன்!
**வாழ்க தமிழ்!! , வளர்க பாரதம்!!**
**26-01-2017**